# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 சித்திரை 19 வெள்ளிக்கிழமை 02.05.2025 கதிர் 184









## நல்லை ஆதீன குரு முதல்வரின் புகழுடலுக்குப் பலரும் அஞ்சலி

யாழ்ப்பாணம், மே 02

இறையடி சேர்ந்த நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் புகழுடலுக்குப் பலரும் நல்லை ஆதீனத்தில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

கொழும்பில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்த 7

# தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தமிழர்களே வாக்களியுங்கள்!

## வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 02

"தமிழ் மக்களின் இருப்புக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்குமாகத் தமிழ்த் தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டும் உங்களுடைய பெறுமதியான வாக்குகளை அளியுங்கள்." - என்று வடக்கு - கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினர், தமிழ் மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களின் குறித்த சங்கப் பிரதிநிதிகள் ஊடக சந்திப்பை நடத்தியபோதே அவர்கள் இதனைக் கூறினர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில், 7




## மட்டக்களப்பில் யானை தாக்கி விவசாயி ஒருவர் பரிதாபப் பலி



மட்டக்களப்பு, மே 02

மட்டக்களப்பு, வவுணதீவு, பாலைக்காடு வயல் பிரதேசத்தில் வேளாண்மைக்கு நீர் பாய்ச்சச் சென்ற விவசாயி ஒருவர் யானை தாக்கி உயிரிழந்துள்ளார்.

நாவற்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயதுடைய வைரமுத்து மகாலிங்கம் என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி விவசாயி வழமை 7

### யானைத் தடுப்பு மின் வேலியைச் சுத்திகரித்தபோது

## மின்சாரம் தாக்கி இருவர் மரணம்!

திருகோணமலை, மே 02

திருகோணமலை, ஈச்சிலம்பற்று - சூரியநகரில் வயல்வெளியில் யானைத் தடுப்பு மின் வேலியைச் சுத்திகரித்தபோது மின்சாரம் தாக்கியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

29 மற்றும் 47 வயதுடைய நபர்களே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்கள். 7



## தென்னக்கோனுக்குக் கொலை மிரட்டல்: சி.ஐ.டியினரால் விசாரணைகள் ஆரம்பம்



கொழும்பு, மே 02

இனந்தெரியாத இரண்டு நபர்களால் பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனுக்குக் கொலை மிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் இன்று வெள் ளிக்கிழமை 7

# தமிழரின் அபிலாஷைகளுக்கு சமாதி கட்டப்படும் அபாயம்!

## ஈ.பி.டி.பியின் ஸ்ரீகாந்த் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், மே 02

உள்ளூராட்சி மன்றங்கள் வடக்கு, கிழக்கில் தேசிய மக்கள் சக்தியிடம் செல்லுமாயின் தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்குச் சமாதி கட்டப்படும் அபாயம் இருக்கின்றது என்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் ஊடகச் செயலாளர் ஸ்ரீகாந் தெரிவித்தார்.

யாழ். ஊடக மையத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

"வடக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான காணிகளை அபகரிப்பதற்கான வர்த்தமானி வெளியிடப்பட்டு இருக்கின்றமை தொடர்பான தகவல்களை ஊடகங்கள் 7



# பிள்ளையான் கைது அரசியல் பழிவாங்கல்





கொழும்பு, மே .2

களுவாஞ்சிக்குடி அஷ்ரப்பிற்கு பிள்ளையானைப் பற்றிப் பேசாவிட்டால் நித்திரை வருவதில்லை கருணா அம்மான் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனையில் இடம்பெற்ற கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் மே தின கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், களுவாஞ்சிக்குடி அஷ்ரப்பின் வாயில் வரும் வார்த்தை பிள்ளையான் பிள்ளையான், பிள்ளையான பற்றி பேசாவிட்டால் அவருக்கு நித்திரை வருவதில்லை.

அரசியல்பழிவாங்கலினால் திட்டமிட்டு பிள்ளையானை கைது செய்தார்கள். இந்த உலகம் முழுவதும் பிள்ளையான் பிள்ளையான் என கத்துகிறார்கள் எனவும் தெரிவித்துள்ளார்.

72 வருடங்களுக்கு மேலாக வீட்டுக்கு வாக்களித்து வாக்களித்து வீடும் இல்லாமல் தமிழ் மக்கள் நடுத்தெருவில் கொண்டு வந்தவர்கள்தான் தமிழரசுக் கட்சியினர் என இதன்போது தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பூபாலபிள்ளை பிரசாந்தன் குறிப்பிட்டுள்ளார்.

போராளிகளின் புதை குழிகளில் நின்று கேவலமாக வாக்கு கேட்கும் நீங்கள் போராளிகளின் குடும்பங்களை புதைகுழிக்குள் கொல்லாமல் பாதுகாக்க முடியாமல் நிற்கின்றீரகளே வெட்கம் இல்லையா. எங்களை விமர்சிப்பவர்கள் அனைவரும், நாங்கள் போட்ட பாதைகளால்தான் செல்கிறார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார். (ஐ).



## கூட்டத்தில் இருந்து இடைநடுவில் எழுந்து சென்ற பொதுமக்கள்

கொழும்பு, மே .2

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் நடைபெற்ற மே தினக் கூட்டத்தில் இடைநடுவில் பொதுமக்கள் எழுந்து சென்றதன் காரணமாக சலசலப்பு ஏற்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் அதன் பங்காளிக் கட்சிகளின் மே தினக் கூட்டம் நேற்றைய தினம தலவாக்கலை நகரில் நடைபெற்றது.

இதன் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இடைநடுவில் உரையாற்றினார். அவருக்குப்பின் இன்னும் பலர் உரையாற்றக் காத்திருந்தனர்.

எனினும் சஜித் பிரேமதாசவின் உரை முடிந்த கையோடு பொதுமக்கள் கூட்டம் நடைபெற்ற மைதானத்தை விட்டும் எழுந்து செல்லத் தொடங்கியுள்ளனர்.

இதன் காரணமாக அடுத்து உரையாற்ற வந்த கட்சியின் செயற்பாட்டு ஒருங்கிணைப்பாளர் துஷார இந்துனில் , பெரும் அசௌகரியத்தை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

அதனையடுத்து கூட்டத்தின் தொகுப்பாளர் ,கூட்டம் இன்னும் முடியவில்லை, எனவே பொதுமக்கள் வெளியேற வேண்டாம் என்று பல தடவைகள் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்தும் வெளியேறிய பொதுமக்களை நிறுத்த முடியாமல் போயுள்ளது. இதன் காரணமாக சஜித் தின் மே தினக் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. (ஐ)

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# குற்றமிழைத்தால் தண்டனை கிடைக்கும்



கொழும்பு, மே .2

பரம்பரை அலகில் இருந்தும் நீக்கப்பட்டதை தொடர்ந்து இன்று பல அரசியல் தரப்பினரது அழுகுரல் கேட்கிறது எனவும் குற்றமிழைத்தால் தண்டனை கிடைக்கும் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

இத தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

நாட்டினதும், நாட்டு மக்களினதும் எதிர்காலத்தை முன்னிலைப்படுத்தியதாக தேசிய மக்கள் சக்தி செயற்படுகிறது. ஏனைய கட்சிகள் சூன்யமாக்கப்பட்டுள்ளன.

அரசியல் அதிகாரம் குடும்ப அலகில் இருந்தும், பரம்பரை அலகில் இருந்தும் நீக்கப்பட்டதை தொடர்ந்து இன்று பல அரசியல் தரப்பினரது அழுகுரல் கேட்கிறது.

நாட்டு மக்கள் கடந்த ஆண்டு நடைபெற்ற அரசியல் ரீதியில் சிறந்த தீர்மானத்தை எடுத்து ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

மக்களின் தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவர்கள் இன்று ஒன்ற ிணைந்துள்ளார்கள்.

கடந்த மார்ச் மாதம் அரசாங்கம் வீழ்ச்சியடையும் என்றார்கள் தற்போது ஒகஸ்ட், டிசெம்பர் என்று குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். தோல்வி மற்றும் அச்சத்தின் வெளிப்பாடே இதுவாகும்.

ஆகவே அரசாங்கத்துக்கு பாரிய தொரு சவால் ஏதும் கிடையாது. சூன்யமாக்கப்பட்டுள்ள தரப்பினர் மாத்திரமே ஒன்றிணைந்துள்ளார்கள்.

இந்த நாட்டை எம்மால் கட்டியெழுப்ப முடியும். மக்கள் எம்மீது கொண்டுள்ள நம்பிக்கையை நாங்கள் நிச்சயம் பாதுகாப்போம். மக்களின் நம்பிக்கை என்ற பாரதூரமான பலம் எம்மிடம் உள்ளது" என கூறியுள்ளார். (ஐ)

## சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து வெற்றியடைந்த நாடுகள் கிடையாது




கொழும்பு, மே .2

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்டு வெற்றியடைந்த நாடுகள் உலகில் கிடையாது என ஆளும் கட்சியின் சிரேஸ்ட அமைச்சர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் சுமார் 94 நாடுகள் உடன்படிக்கை கைச்சாத்திட்டுள்ளதாகவும் இதில் 92 நாடுகள் தோல்வியடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக இந்த நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பல நாடுகள் தோல்வியடைந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது அரசாங்கம் ஆட்சிப் பொறுப்பினை ஏற்ற போது இலங்கை சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தின் கீழ் ஏற்கனவே உள்வாங்கப்பட்டிருந்தது என அவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்தினால் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபவார்கள் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டு இந்த அரசாங்கம் மக்களின் கழுத்தை நெரிக்கும் என பலர் காத்திருந்தனர் என அவர் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு பாதகம் இல்லாத வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அமைச்சர் பிமல் ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

தற்பொழுது நாட்டு மக்களின் வாழ்க்கை பூரண செழிப்படையவில்லை என்பதை ஒப்புக்கொள்வதாகத் தெரிவித்துள்ளார். (ஐ)

## சர்வதேசத்தின் கவனத்தை ஈர்க்கவே தேர்தலில் என்.பி.பி மும்முரம் சிறீதரன் பகிரங்கம்

தமிழ் மக்கள் தம்மை அங்கீகரித்ததாக சர்வதேசத்துக்கு காட்டவே உள்ளூராட்சித் தேர்தலில் என்.பி.பி மும்முரமாக உள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரனதெரிவித்துள்ளார். இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் பூநகரி பிரதேச சபைக்கான தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதன் ஊடாக..

மேலும் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கிலுள்ள உள்ளூராட்சி சபைகளை கைப்பற்றுவதன் ஊடாக, தமிழ் மக்கள் தங்களை அங்கீகரித்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் மீது மேற்கொள்ளப்பட்டது இனப்படுகொலை அல்ல என்றும் காட்டவே முயற்சிக்கின்றது.

இந்நிலையில், மனித குலத்திற்கு எதிரான போர்க்குற்றங்களில் இலங்கையின் அரசு, இராணுவ நிர்வாகம் ஈடுபடவில்லை என்று நிரூபிப்பதற்கான ஜனநாயகத் தீர்ப்பாக உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலைப் பயன்படுத்த எல்லாவகைப் பிரயத்தனங்களையும், மோசடிகளையும் இந்த அரசு மேற்கொண்டு வருகிறது என்றும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)




## தேர்தல் பிரசாரப் பணிகள் நாளையுடன் நிறைவு

கொழும்பு, மே .2


தேர்தல் பிரசாரப் பணிகள் நாளைய தினம் நள்ளிரவுடன் நிறைவடைவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான பிரசாரப் பணிகள் நாளைய தினம் நள்ளிரவுடன் பூர்த்தியாவதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு அதாவது நாளைய தினம் நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக தேர்தலில் போட்டியிடும் அனைத்து அரசியல் கட்சிகள் மற்றும் சுயாதீனக் குழுக்கள், வேட்பாளர்கள் தங்களது பிரசாரப் பணிகளை நிறைவு செய்து கொள்ள வேண்டுமென தேர்தல் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் பிரசாரப் பணிகள் நிறைவடைந்ததன் பின்னரான காலத்தில் பிரசாரத்தில் ஈடுபடுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வாகன இறக்குமதிக்கு விதிக்கப்பட்ட சில கட்டுப்பாடுகள் நீக்கம்



கொழும்பு, மே .2

இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் மீதான சில முக்கிய கட்டுப்பாடுகள் நீக்கப் பட்டுள்ளதாகவும், அதற்கமைய புதிய வர்த்தமானி அறிவித்தல் ஒன்று கடந்த ஏப்ரல் 29ஆம் திகதியிலிருந்து அமுலுக்கு வந்துள்ளதாகவும், இலங்கை நிதி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல், நிதி, பொருளாதார மேலாண்மை மற்றும் அபிவிருத்தி அமைச்சர் மற்றும் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், முன்பு இறக்குமதி செய்யப்பட்டு, ஆனால் ஏதேனும் காரணங்களால் துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஹைபிரிட் உலடிசனை வகை மோட்டார் வாகனங்களை தற்போது விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முந்தைய மாதம் ஒன்றரை அல்லது இரண்டு மாதங்களாக இந்த வாகனங்களை எங்களால் விடுவிக்க முடியவில்லை என இலங்கை வாகன இறக்குமதி சங்கத்தின் தலைவர் பிரசாத் மானகே தெரிவித்துள்ளார்.

புதிய வர்த்தமானி காரணமாக உலடிசனை வுழலழவய சுயணைந மற்றும் உலடிசனை ளுளையெ ஓ-வுசயுஜடு போன்ற வாகனங்களை இப்போது துறைமுகத்திலிருந்து விடுவிக்க முடிவதாகத் தெரிவித்துள்ளார். இதே போன்று இத்தகைய தொழில்நுட்பத்தில் உருவாகும் பிற வாகனங்களுக்கும் இப்போதோடு வெளியேற்ற அனுமதி கிடைத்துள்ளது.

இதற்கிடையில், பதிவு செய்யப்படாத புதிய மோட்டார்சைக்கிள் வகை வாகனங்களை இறக்குமதிசெய்வதற்கான தடை தீர்க்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது. அதன்படி, இறக்குமதி உரிமம் பெற்றவர்களால் புதிய மோட்டார்சைக்கிள்கள் இறக்குமதிசெய்ய அனுமதிக்கும் புதிய வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளதாக அதிகாரபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# இனியும் முதல்வர் மூடி மறைப்பது நல்லதுக்கில்லை

## எச்சரிக்கும் அண்ணாமலை



'தி.மு.க., அரசால், தொடர் படுகொலைகளைத் தடுக்க முடியவில்லை. குற்றவாளிகளையும் கைது செய்ய முடியவில்லை. இனியும் முதல்வர் இதனை மூடி மறைக்க முயன்றால், தமிழகத்தில் பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்தவித உறுதியும் இல்லை,' என்று பா.ஜ., முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை ஈரோடு மாவட்டம் சிவகிரி அருகே, தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த வயதான தம்பதியினர் படுகொலை செய்யப்பட்டுள்ளது மிகவும் அதிர்ச்சி அளிக்கிறது. தனியாக வசித்து வருபவர்களைக் குறிவைத்து, தொடர்ந்து கொலைச் சம்பவங்கள் நடைபெறுகின்றன. கடந்த 2023ம் ஆண்டும், பல்லடம் பகுதியில், ஒரே குடும்பத்தில் நான்கு பேர் வெட்டிக் கொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. கடந்த 2024ம் ஆண்டு நவம்பர் மாதம், திருப்பூர் மாவட்டம் சேமலைகவுண்டம்பாளையத்தில், தாய், தந்தை, மகன் என மூன்று பேர் கொலை செய்யப்பட்டனர்.

அனைத்துக் கொலைகளுமே, சுமார் 50 கி.மீ. சுற்றளவில்தான் நடைபெறுகின்றன. ஆனால், இதுவரை ஒரு குற்றவாளி கூடக் கைது செய்யப்படவில்லை. தமிழகக் காவல்துறை செயலிழந்து போய்விட்டதா என்ன?

பொதுமக்கள் மிகவும் அச்சத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள். ஆனால், காவல்துறையைக் கையில் வைத்திருக்கும் முதல்வர், அங்கொன்றும், இங்கொன்றுமாக ஒரு சில குற்றங்கள் மட்டுமே நடைபெறுகின்றன என்று சட்டமன்றத்தில் சாதாரணமாகக் கூறுகிறார். ஒரே பாணியில் தொடர் கொலைகள் நடப்பதுதான் அங்கொன்றும் இங்கொன்றுமா?

தி.மு.க., அரசால், தொடர் படுகொலைகளைத் தடுக்க முடியவில்லை. குற்றவாளிகளையும் கைது செய்ய முடியவில்லை. இந்த ஒட்டு மொத்த வழக்குகளையும் சி.பி.ஐ.,க்கு மாற்ற ஏற்கனவே வலியுறுத்தியிருந்தோம். இனியும் முதல்வர் இதனை மூடி மறைக்க முயல்வாரேயானால், தமிழகத்தில் பொதுமக்கள் பாதுகாப்புக்கு எந்தவித உறுதியும் இல்லை என்பதுதான் பொருள், இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல, பா.ம.க., செயல் தலைவர் அன்புமணி வெளியிட்டுள்ள அறிக்கையில் ஈரோடு மாவட்டத்தின் விளாங்காட்டு வலசு கிராமத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வாழ்ந்து வந்த முதிய இணையரான ராக்கியப்பன், பாக்கியம் ஆகியோரை கொள்ளையர்கள் அடித்துக் கொலை செய்து விட்டு, 15 பவுன் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்ற செய்தியறிந்து அதிர்ச்சி அடைந்தேன். அவர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் அண்மைக்காலமாகவே பணம், நகைக்காக வயது முதிர்ந்த இணையர்கள் படுகொலை செய்யப்படுவது அதிகரித்து வருகிறது. திருப்பூர் மாவட்டம், பல்லடம் அருகே உள்ள சேமலைக்கவுண்டன்பாளையம் கிராமத்தில் தோட்டத்து வீட்டில் வசித்து வந்த 78 வயது தெய்வசிகாமணி, அவரது மனைவி அலமாத்தாள், செந்தில்குமார் ஆகிய மூவரும் கடந்த நவம்பர் 28ம் தேதி கொடூரமாக படுகொலை செய்யப்பட்டு, நகை மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டது. இந்த நிகழ்வு நடந்து 150 நாள்களுக்கு மேலாகியும் இதுவரை துப்பு துலங்கவில்லை.

அடுத்தடுத்து நடக்கும் கொலைகளும், அதற்குக் காரணமானவர்கள் கண்டுபிடிக்கப்படாததும் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நிலையை மாற்றி மக்களிடம் நம்பிக்கையையும், பாதுகாப்பு உணர்வையும் ஏற்படுத்த வேண்டியது தமிழக அரசின் கடமை ஆகும். இதை உணர்ந்து தமிழ்நாட்டில் சட்டம் - ஒழுங்கை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும், இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# பா.ஜ.,வுடன் கூட்டணி சேர்வதற்கு இ.பி.எஸ்., இடம் வலியுறுத்தினேன்

## அ.தி.மு.க., சிறுபான்மை பிரிவு நிர்வாகி பேச்சு



'பா.ஜ.,வோடு கூட்டணி வைக்க வேண்டும் என நானே சொன்னேன்.. முஸ்லீம்கள் நமக்கு ஓட்டுப் போட மாட்டார்கள் என அதிமுக சிறுபான்மை பிரிவு இணைச்செயலாளர் அப்துல் ஜபார் தெரிவித்துள்ளார்.

ஷஅ.தி.மு.க., முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் தலைமையில் நடைபெற்ற மே தின விழா பொதுக்கூட்டத்தில் அ.தி.மு.க., சிறுபான்மை பிரிவு இணைச் செயலாளர் அப்துல் ஜபார் பேசியதாவது: நானே இ.பி.எஸ்., இடம் சொன 'னேன். நம்ம இந்த தேர்தலில் பா.ஜ., உடன் தான் கூட்டணி வைக்க வேண்டும். முஸ்லிம்கள் ஓட்டு போட மாட்டார்கள்.

ஷமுஸ்லிம்கள் வந்து அதிமுகவுக்கு ஓட்டு போட மாட்டார்கள். நான் வந்து கோவையில் பெரிய முஸ்லிம் ஜமாத்தின் தலைவர். நான் கண்ணால பார்த்து விட்டேன். கோவையில் வேலுமணி என்று ஒருத்தர் இருக்கிறார். அவர் வந்து முஸ்லிம்களுக்கு நிறைய காரியங்கள் செய்தார். ஆனால் யாரும் ஓட்டு போடவில்லை.

ஷகடந்த 2024ம் ஆண்டு லோக்சபா தேர்தலில், நாம் பாஜ.,வோடு இல்லை. நம்ம கூட ஒரு முஸ்லிம் கட்சி இருந்துச்சு, ஆனால் அந்தக் கட்சியும் சேர்ந்து திமுகவுக்கு ஓட்டு அளித்தது. அதனால் நாம் ஏன் பாஜவை பகைக்க வேண்டும். பாஜ., உடன் கூட்டணி சேர்ந்தால் நமக்கு ஒரு பலம் வரும். ஆள் பலம், அதிகாரம் பலம் வரும். இன்றைக்கு அதிகாரம் பலம் தான் பேசுகிறது. பாஜ., உடன் கூட்டணி வைக்க வேண்டும் என்று சொன 'னேன். இன்றைக்கு வைத்திருக்கிறார்கள்.

ஷநிச்சயமாக இந்த கூட்டணி வளமான கூட்டணியாக மாறும். வளமான சக்தியாக உருவெடுக்கும். அந்த உருவெடுக்கும் சக்திக்கு நாமெல்லாம் துணை நிற்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

ஷஇதற்கிடையே, கோவை மாவட்ட ஐக்கிய ஜமாத் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அப்துல் ஜப்பார் நீக்கப்பட்டுள்ளார். இதற்கான அறிவிப்பை, அதன் நிர்வாகிகள் வெளியிட்டுள்ளனர். (ஐ)



# வளர்ந்த பாரதம் உருவாக்க புதுமைகள் படைக்க வேண்டும்: ஜெய்சங்கர்

வரும் 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க புதுமைகளை படைப்பது மிகவும் முக்கியமானது என மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடந்த 'வேவ்ஸ்' உலக ஆடியோ விஷுவல் பொழுதுபோக்கு மாநாட்டில் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கர் பேசியதாவது: உலகம் பன்முகத்தன்மை கொண்டது. கடந்த காலங்களில் பன்முகத்தன்மையானது, காலனித்துவம் மற்றும் பெரிய சக்திகளின் ஆதிக்கத்தால் அடக்கப்பட்டது.

சர்வதேச அமைப்பை ஜனநாயகப்படுத்த, நமது மரபுகள், பாரம்பரியம், படைப்பாற்றலுக்கு நாம் குரல் கொடுக்க வேண்டும். 2047ம் ஆண்டுக்குள் வளர்ச்சி அடைந்த பாரதத்தை உருவாக்க புதுமை முக்கியமானது.

தொழில்நுட்பத்தின் சக்தியை மிகவும் திறம்பட பயன்படுத்துவதன் மூலம் இது சிறப்பாக செய்யப்படுகிறது. அரசியல் நம்பகத்தன்மை தொடர்பான கவலைகளுடன் போராடும் அதே வேளையில், புதிய அறிவுசார் சொத்துரிமை சவால்களைச் சமாளிக்கவும் வேண்டியிருக்கும். இவ்வாறு ஜெய்சங்கர் பேசினார். (ஐ)

# எங்கே போனது ரூ.6,266 கோடி 2 ஆயிரம் ரூபாய் நோட்டு கணக்கு விவரம் வெளியிட்டது ரிசர்வ் வங்கி

இதுவரை 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் 98.24 சதவீதம் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தகவல் தெரிவித்து உள்ளது.

கடந்த 2023, மே 19ம் தேதி புழக்கத்தில் இருந்த 2000 ரூபாய் நோட்டுகளை திரும்ப பெறுவதாக ரிசர்வ் வங்கி அறிவித்தது. இதுவரை திரும்பப் பெறப்பட்ட ரூபாய் நோட்டுகள் பற்றி ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

2023ம் ஆண்டு மே 19ம் தேதி நிலவரப்படி ரூ.3.56 லட்சம் மதிப்புக்கு 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் புழக்கத்தில் இருந்தன. அவற்றை திரும்ப பெற்றுக் கொள்வதாக அறிவிப்பு வெளியிட்டது முதல் பொதுமக்கள் அவற்றை வங்கிகளில் திரும்ப செலுத்தினர்.

அதன்படி இந்தாண்டு ஏப்ரல் 30ம் தேதி, 98.24 சதவீதம் நோட்டுகள் திரும்ப வந்து விட்டன. ரூ.6,266 கோடி மதிப்பிலான 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகள் (1.76 சதவீதம்) திரும்ப வரவில்லை. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

ரிசர்வ் வங்கிக்கு திரும்ப வராத நோட்டுகள், இந்தியா மட்டுமின்றி, நேபாளம், பூடான், வங்கதேசம் போன்ற நாடுகளிலும் இருக்கலாம் என்று நிபுணர்கள் கருதுகின்றனர். (ஐ)

# போர்களின் தேசம்!

ரமாதேவி ரத்தினசாமி

'சிட்டி சைட் சீயிங் சைகோன்' சுற்றுலா பேருந்து நாங்கள் நின்றிருந்த சைகோன் ஓபரா ஹவுஸ் பேருந்து நிறுத்தத்தில் வந்து நிற்க, சிறுபிள்ளைகள்போல் அடித்துப் பிடித்து ஏறினோம். கண்ணைக் கவரும் சிவப்பு வண்ணத்தில் அலங்காரமாக இருந்த பேருந்தில், மேற்கூரையில்லாத மாடியில் இடம் பிடிப்பதற்காகத்தான் அந்தப் போட்டி. ஆனால், பேருந்தில் மொத்தமே எங்களைத் தவிர நான்கைந்து பேர்தான் இருந்தனர். 24 மணிநேரத்திற்குச் செல்லுபடியாகும் பயணக்கட்டணத்தின் விலை நாலு லட்சத்து இருபத்து ஒன்பதாயிரம் வியட்நாம் டாங்குகள். எங்கள் மூன்று பேருக்குப் பதிமூன்று லட்சத்தைப் பெருமூச்சுடன் எண்ணிக்கொடுத்தேன். பேருந்துக்குள் ஏறும்போதே வியட்நாமின் பாரம்பரியக் கூம்பு வடிவத்தொப்பியும் இடங்கள் குறித்த வரலாற்றுச் செய்திகளைக் கேட்பதற்காக இயர்போனும் தந்துவிடுகின்றனர். பதிவு செய்யப்பட்ட செய்திகள் ஒன்பது மொழிகளில் ஒலிபரப்பு செய்யப்படுகின்றன. ஆனாலும் அதில் அரையும் குறையுமாக யாமறிந்த மொழி ஆங்கிலம் மட்டுமே என்பதால் அதையே தேர்வு செய்தோம்.

பத்துப் பேரும், அந்தத் தொப்பியைப் போட்டுக்கொண்டு போட்டோ ஷூட் பண்ணிய அலப்பறை கண்டு வியட்நாம் காற்று ஒரு நிமிடம் உறைந்து பின் வீசியது! அடுத்த நிறுத்தம் 'போர் எச்சங்கள் அருங்காட்சியகம்' என அறிந்துகொண்டோம். தொப்பி விளையாட்டுகளை நிறுத்திவிட்டு, வியட்நாம் குறித்த வரலாற்றுச் செய்திகளை சீரியஸாக உள்வாங்க, காலம் டைம் மெஷின் உதவியின்றி என்னைப் பின்னோக்கி இழுத்துச் சென்றது.

அத்தனை பெரிய ஆசியாவில் சீனாவின் வால்போல் நீண்டிருக்கும் ஒரு குட்டி தேசம் பண்டைய நாகரிகங்களின் தாயகமாக, பல்வேறு வம்சங்களின் வரலாறாக, பன்முகத்தன்மை கொண்டதாக இருப்பது உலக வரலாற்றின் விநோதங்களில் சகஜமானதுதான். அதற்குச் சான்றாக 22,000 ஆண்டுகளுக்கு முந்தைய மனித வாழ்வின் பயன்பாட்டுக் கலைப்பொருள்கள் இங்கு கண்டறியப்பட்டுள்ளன. 5 லட்சம் வருடங்கள் பழமையான ஹோமோ எரெக்டஸ் மனித எச்சங்கள் வடக்கு வியட்நாமின் லாங் சான் மற்றும் ங்கே ஆன் மாகாணங்களிலுள்ள குகைகளில் உறைந்திருந்த செய்தி வாய் பிளக்க வைக்கிறது. தொடர்ந்து தொல்லியல் ஆய்வுகள் நடைபெறுகின்றன. ஒவ்வோர் ஆய்வின் முடிவிலும் வியட்நாமின் தொன்மை நிரூபிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது. பழங்கற்காலத்திலும் வெண்கலக்காலத்திலும் மனிதர்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் அள்ள அள்ளக் குறையாத அமுதசுரபியாக நிரம்பிக் கிடக்கின்றன. கி.மு. 2879க்கு முன்பே இங்கு அடர்த்தியான மனித வாழ்க்கை தொடங்கியிருக்க வேண்டும் என்று கணிக்கிறார்கள். வியட்நாமின் வரலாறு குறைந்தபட்சம் 4 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது என்பதில் சந்தேகமில்லையெனினும், ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலான பதிவு செய்யப்பட்ட வரலாற்றைக் கொண்டுள்ளதாக இருக்கிறது.



"வியட்நாம் அதன் புவியியல் நிலப்பரப்பு அமைப்பினால் இயற்கைக்கு எதிராகவும் அருகாமையிலிருந்த கொடுங்கோன்மைக்கு எதிராகவும் சதாசர்வகாலமும் போராட வேண்டிய சூழலில் இருந்தது. நிலம், பொருளாதாரம், ராணுவம் என அனைத்திலும் சக்தி வாய்ந்த அரக்கனாக, வியட்நாம் என்கிற முயலுடன் ஒப்பிட்டால் யானை போன்ற ஒரு மாபெரும் நாடாக இருந்த சீனா, தன்னருகில் இருந்த அழகிய முயல்குட்டி தேசத்தை கையகப்படுத்திக் கொள்ள எப்போதும் முயற்சித்து, அதில் வெற்றியும் பெற்றதில் வியப்பில்லை. ஆனால், சந்தர்ப்பம் வாய்த்த நேரத்திலெல்லாம் சீன அதிகாரத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்து, தன் எதிர்ப்பை வரலாற்றில் பதிவுசெய்ய வியட்நாமும் தவறவில்லை.

ஆனால், இத்தனை தொன்மையான வரலாற்றின் பக்கங்கள் எங்கும் போர்களின் வடுக்கள் கெட்டிதட்டிக் கிடக்கின்றன. போர்கள் ஒன்றும் இந்தப் பூமிக்குப் புதிதல்ல, மனிதன் தோன்றியபோதே போர்க்குணங்களும் தோன்றியிருக்க வேண்டும்தான். தனக்குச் சொந்தமில்லாததை, தன்னால் முடிந்தவரை கையகப்படுத்திக்கொள்ள வேண்டும் என்கிற தனிமனித ஆசையே, பல்லாயிரக் கணக்கானோரைக் கொன்று குவித்தேனும், தன் தலைமைத்துவத்தை நிலைநிறுத்தும் வேட்கையாக மாறுகிறது. அப்படியான போர்களின் கொடூரமான கால்தடங்கள் நிரம்பிக்கிடக்கும் தேசங்களுள் இந்தக் குட்டிதேசம் முன்வரிசையில் நிற்கிறது. கூகுளுக்குள் நுழைந்தால், வியட்நாம் என்கிற வார்த்தையுடன் போர் என்கிற வார்த்தையும் எப்போதும் பின்னிப் பிணைந்து தொடர்கிறது. வியட்நாமின் போர்நிறை உலகிற்குள் அமானுஷ்யமாக நுழைந்தேன்.

### காலம்: கி.மு. 207
### இடம் : ஆசியாவின் பெருந்தேசமான சீனா

சீனாவின் கின் வம்சத்தைச் சேர்ந்த ட்ரியூ டாவால் என்கிற மன்னர் தன் படைப்பரிவாரங்களுடன் தேசவலம் வருகிறார். தங்கள் தேசத்தின் காலுக்குக் கீழே கடற்புறத்தே நீண்டிருந்த நிலப்பகுதி கண்ணில் படுகிறது. மனிதவளமும் செல்வமும் நிரம்பியிருந்த அந்தப் பகுதி இன்னும் ஏன் தன் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை? படைகளைத் திரும்பிப் பார்க்கிறார். அவர் பார்வை புரிந்து படைகள் தங்கள் பணியை செவ்வனே செய்ய அடுத்த சில நாட்களில் அந்த நிலமும் அவருக்குச் சொந்தமாகிறது. ஆம், தன் அத்தனை பெரிய தேசத்துடன் மூலையில் ஒடுங்கியிருந்த அண்டை நிலத்தையும் தன் பேரரசுடன் சேர்த்துக்கொள்கிறார். ஆசை–இல்லையில்லை–பேராசை மனிதனின் இயல்புதானே? அப்போது வியட்நாம் என்றெல்லாம் பெயரிடப்படாத வளம் கொட்டிக்கிடந்த குட்டி தேசம் அது. அதன்பின் விரும்பியபோதெல்லாம் தங்களை ஆக்கிரமித்துக்கொள்ளும் சீன அரசை எதிர்த்து வியட்நாமியர்கள் கிளர்ச்சி செய்து தங்கள் நிலத்தை மீட்பதும், மீண்டும் சீனா ஆக்கிரமிப்பதுமான 'பூப்பறிக்க வருகிறோம்- பூப்பறிக்க வருகிறோம்-' விளையாட்டு ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக இருதரப்பாலும் விளையாடப்பட்டுக்கொண்டே இருந்தது.

வியட்நாம் அதன் புவியியல் நிலப்பரப்பு அமைப்பினால் இயற்கைக்கு எதிராகவும் அருகாமையிலிருந்த கொடுங்கோன்மைக்கு எதிராகவும் சதாசர்வகாலமும் போராட வேண்டிய சூழலில் இருந்தது. நிலம், பொருளாதாரம், ராணுவம் என அனைத்திலும் சக்தி வாய்ந்த அரக்கனாக, வியட்நாம் என்கிற முயலுடன் ஒப்பிட்டால் யானை போன்ற ஒரு மாபெரும் நாடாக இருந்த சீனா, தன்னருகில் இருந்த அழகிய முயல்குட்டி தேசத்தை கையகப்படுத்திக் கொள்ள எப்போதும் முயற்சித்து, அதில் வெற்றியும் பெற்றதில் வியப்பில்லை. ஆனால், சந்தர்ப்பம் வாய்த்த நேரத்திலெல்லாம் சீன அதிகாரத்திற்கு எதிராக கிளர்ச்சி செய்து, தன் எதிர்ப்பை வரலாற்றில் பதிவுசெய்ய வியட்நாமும் தவறவில்லை. (8ஆம் பக்கம் பார்க்க..)



# ஈரானிடம் எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது தடைகள் விதிப்பேன்: டிரம்ப் எச்சரிக்கை



'ஈரான் நாட்டிடம் எண்ணெய் வாங்கும் நாடுகள் மீது பொருளாதார தடைகள் விதிப்பேன்' என அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதங்களை தயாரிப்பதை தடுக்க, புதிய ஒப்பந்தத்தை கொண்டு வர அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். மேலும், அணு ஆயுத உற்பத்திக்கு தடை விதிக்கும் ஒப்பந்தத்திற்கு உடன்பட மறுத்தால், ஈரான் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் பகிரங்க எச்சரிக்கை விடுத்து இருந்தார்.

தற்போது ஈரானுடன் வர்த்தக உறவு வைத்திருக்கும் நாடுகளுக்கு அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள அறிக்கை:

ஈரான் எண்ணெய் அல்லது பெட்ரோ கெமிக்கல் பொருட்களின் அனைத்து கொள்முதல்களும் இப்போதே நிறுத்தப்பட வேண்டும்.

ஈரானில் இருந்து எந்த அளவு எண்ணெய் அல்லது பெட்ரோ கெமிக்கல்களை வாங்கினாலும், அந்த நாடு அல்லது நபர் உடனடியாக இரண்டாம் நிலை தடைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள்.

அவர்கள் அமெரிக்காவுடன் எந்த வகையிலும், வணிகம் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள். அவர்களுக்கு பொருளாதார தடை விதிக்கப்படும். இந்த விஷயத்தில் உங்கள் கவனத்திற்கு நன்றி. இவ்வாறு அதிபர் டிரம்ப் கூறியுள்ளார். (ஐ)

## அரிய வகை கனிமங்களை வெட்டி எடுக்க அமெரிக்காவுக்கு அனுமதி அளித்தது உக்ரைன்



உக்ரைனில் உள்ள அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் குத்தகை தொடர்பாக, அமெரிக்கா - உக்ரைன் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்து மூன்று ஆண்டுகள் கடந்து விட்டன. ஐரோப்பிய நாடுகளும், அதிபர் ஜோ பைடன் தலைமையிலான அப்போதைய அமெரிக்க அரசும் உக்ரைனுக்கு உதவிகளை வாரி வழங்கின.

அமெரிக்க அதிபராக டிரம்ப் பதவியேற்றதும் நிலைமை மாறியது. உக்ரைனுக்கு உதவிகளை நிறுத்தினார். போரை முடிவுக்கு கொண்டு வர உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கு அழுத்தம் கொடுத்தார்.

இதுவரை அமெரிக்கா செய்த உதவிகளுக்கு விலையாக, உக்ரைனில் உள்ள அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவுக்கு தரும்படி டிரம்ப் நிர்பந்தம் செய்தார்.

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கிக்கு இதில் உடன்பாடு இல்லை என்றாலும், டிரம்பின் நெருக்கடியை அவரால் தாங்க முடியவில்லை. எனவே, ஒப்பந்தத்தில் கையெழுத்திட அமெரிக்கா சென்றார். அப்போது டிரம்ப் - ஜெலன்ஸ்கி இடையே போர் தொடர்பாக காரசார விவாதம் ஏற்பட, ஒப்பந்தத்தில் கையெழுத்திடாமலேயே ஜெலன்ஸ்கி திரும்பினார்.

இந்த சம்பவம் நடந்து இரண்டு மாதங்களுக்கு பின், உக்ரைனில் உள்ள அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்கும் உரிமையை அமெரிக்காவுக்கு அளிக்கும் ஒப்பந்தத்தில், இரு நாடுகளும் நேற்று முன்தினம் கையொப்பமிட்டன.

இது தொடர்பாக டிரம்ப் கூறுகையில், "ஒப்பந்தம் கையெழுத்தானது. உக்ரைனுக்கு அளித்ததை விட அவர்களிடம் இருந்து அதிகம் பெற்றுள்ளோம். செய்த முதலீட்டுக்கான பலன்களை பெறாமல் இருக்க அமெரிக்கா முட்டாள் அல்ல," என்றார்.

அரியவகை கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி வழங்கியதற்கு பிரதிபலனாக, போரில் உக்ரைனுக்கு தொடர்ந்து ஆதரவு தர அமெரிக்கா ஒப்புக்கொண்டுள்ளது.

## புயல், கனமழையால் நியூசிலாந்தில் பாதிப்பு




நியூசிலாந்தில் கனமழை பெய்ததால் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. புயல்காற்று வீசுவதால் வெலிங்டனில் கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. தென்மேற்கு பசிபிக் கடல் நாடான நியூசிலாந்து வடக்கு தீவு மற்றும் தெற்கு தீவு என இரு பகுதிகளை உள்ளடக்கியது. இந்த நாட்டின் தெற்கு பகுதியில் நேற்று கனமழை பெய்ததால் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் வீடுகளை விட்டு வெளியே முடியாமல் மக்கள் தவித்தனர். அவர்களை மீட்புப்படையினர் மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்பினர்.

கிறிஸ்ட்சர்ச்நகரில்பெய்த கனமழையை தொடர்ந்து அங்கு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. இரண்டு தீவுகளின் சில பகுதிகளிலும் கடுமையான மழை மற்றும் கடலில் பேரலைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பு உள்ளதாக வானிலை மையம் எச்சரித்துள்ளது.

வெலிங்டனில் பயங்கர புயல் காற்று வீசியதால் கடும் சேதம் ஏற்பட்டது. மணிக்கு 150 கி.மீ., வேகத்தில் வீசிய இந்த புயலால் பெரும் ஆபத்து ஏற்படும் என வானிலை மையம் எச்சரிக்கை விடுத்திருந்தது. யாரும் வீடுகளை விட்டு வெளியே வேண்டாம் என்றும், பயணங்களை தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டது.

இதையடுத்து வெலிங்டனில் இருந்து புறப்படும் மற்றும் வரும் விமானங்களின் சேவைகள் நேற்று ரத்து செய்யப்பட்டன. படகு சேவையும் இன்று வரை நிறுத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டது. புயல் காரணமாக மரங்கள் மின்கம்பங்கள் விழுந்ததால் மின்சாரம் தடைபட்டது. (ஐ)

## பூச்சாண்டி காட்டுவதற்கு போர் ஒத்திகை நடத்திய பாகிஸ்தான்



பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப்பின் பாக்., ராணுவ தளபதி அசிம் முனீர், சிறிது நாளாக வெளியே தலைகாட்டவில்லை. இவர் பதுங்குகுழிக்குள் இருப்பதாகவும், குடும்பத்தினரை வெளிநாட்டுக்கு அனுப்பிவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இவர் மாயமாகிவிட்டார் என கூறப்பட்ட நிலையில் நேற்று பாக்., ராணுவ தலைமையகம், இவர் இந்திய - பாக்., எல்லையில் உள்ள ஜீலம் மாவட்டத்தில் நடக்கும் போர் ஒத்திகை நிகழ்ச்சில் ராணுவ வீரர்களுடன் இருப்பதாக புகைப்படம் வெளியிட்டுள்ளது. காஷ்மீர், ராஜஸ்தான் எல்லைகள் உட்பட மூன்று இடங்களில், பாகிஸ்தான் தரைப்படை மற்றும் விமானப்படை போர் ஒத்திகை நடத்துவது குறித்த படங்களையும் பாகிஸ்தான் வெளியிட்டுள்ளது. தங்களிடம் எப்., 16, ஜெ. 10, ஜெ.எப்., 17 ரக போர் விமானங்கள் இருப்பதாகவும், பாக்., தம்பட்டம் அடித்துள்ளது. பாகிஸ்தானின் செயல்பாடுகளை பார்த்தால், இந்தியாவிடம் பூச்சாண்டி காட்டி, போரை 'யாசகமாக' பெறுவது போல் தோன்றுகிறது (ஐ)

## நல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நிலையில் நல்லை ஆதீன குரு முதல்வர் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று இரவு இறையடி சேர்ந்தார்.

குரு முதல்வரின் புகழுடல் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நல்லை ஆதீனத்துக்கு இன்று மதியம் கொண்டு வரப்பட்டது.

புகழுடலுக்கு மதத்தலைவர்கள், அரசியல்வாதிகள், பொதுமக்கள் எனப் பலரும் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இறுதிக்கிரியை நிகழ்வு இன்று மாலை நல்லை ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

## மட்டக்களப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

போல் வேளாண்மைக்கு நீர் பாய்ச்சுவதற்காக நேற்று இரவு சென்றவர் இன்று காலை வரையில் வீடு திரும்பி வராத நிலையில் உறவினர்கள் அவரைத் தேடிச் சென்றபோது அவர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்த நிலையில் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.

பின்னர் இது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிப்படுத்தி இருக்கின்றன.

குறிப்பாக உரிமை கோரப்படாத காணிகளைச் சுவீகரிப்பதற்கான காலக்கெடுவும் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இவ்வாறான விடயங்கள் தொடர்பாக மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அதாவது, இவ்வாறான விடயங்களில் அரசியல் தலைமைகள் என்பதற்கு அப்பால் தென்னிலங்கையில் இருக்கின்ற அரச உயர் அதிகாரிகள் மற்றும் அரச திணைக்களங்கள், ஒரு நிகழ்ச்சி நிரலுடன் செயற்பட்டு வருகின்றமையை கடந்த காலங்களில் நாம் அனுபவ ரீதியாக உணர்ந்து கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக சொல்ல வேண்டுமாக இருந்தால், கடந்த ஆட்சிக் காலத்தில் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் வனவளத் திணைக்களம், வனஜீராசிகள் திணைக்களம் மற்றும் தொல்லியல் திணைக்களம் போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள எமது மக்களின் குடியிருப்புக்கள் மற்றும் விசாய நிலங்களை விடுவிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டபோது, சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தென்னிலங்கையின் உயர் அதிகாரிகளினால், சுற்று நிருபங்கள், சட்டங்கள் போன்றவற்றின் பெயரால், தொடர்ச்சியாக சாக்குப் போக்குகள் தெரிவிக்கப்பட்டு வந்தன. இதனால் துறைசார் அமைச்சர்களுடன் கலந்துரையாடி, அமைச்சரவைக்கு இணைந்த அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டு கொள்கையளவு தீர்மானம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

1985 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கையகப்படுத்தப்பட்ட காணிகள் அனைத்தையும் விடுவிக்க வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதியினாலேயே அறிவிக்கப்பட்டிருந்தது. இருந்தாலும் அங்கே இருக்கக்கூடிய அரச உயர் அதிகாரிகள் காணிகளை விடுவிப்பதற்கு மேற்கொள்ள வேண்டிய அலுவலக நடவடிக்கைகளைச் சீராக முன்னெடுக்காமல் திட்டமிட்ட காலதாமதத்தை மேற்கொண்டு வந்திருந்தனர். அவர்கள் சரியாகச் செயற்பட்டிருந்தால் கடந்த ஆட்சிக் காலத்திலேயே ஆயிரக்கணக்கான காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கும்.

அதுமாத்திரமல்லால், விடுவிக்கத் தீர்மானித்த காணிகளுக்குப் பதிலாக எமது பிரதேசத்தில் காணப்படுகின்ற அரச காணிகளைச் சுவீகரிப்பதற்கான தயார்ப்படுத்தல்களையும் முன்னடுத்திருந்தனர்.

இந்த விடயத்தை அறிந்து கொண்ட எமது செயலாளர் நாயகம், ஜனாதிபதியுடன் கலந்துரையாடி அதனைத் தடுத்து நிறுத்தியிருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே தற்போது இந்த விடயம் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

துரதிஷ்டவசமாக இவ்வாறான விடயங்களை எமது மக்கள் நலன்சார்ந்து - எமது மக்களின் இருப்பைப் பாதுகாத்து வலுப்படுத்தும் நோக்கில் கையாளக்கூடியவர்கள் யாரும் தற்போதைய ஆளும் தரப்பில் இல்லாத சூழ்நிலையே காணப்படுகின்றது.

மாற்றத்தை எதிர்பார்த்து எமது மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள்கூட ஏமாற்றம் அளிக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

குறிப்பாக இந்தக் காணி அபகரிப்பு தொடர்பான செய்தியை வெளியே கொண்டு வந்த ஊடகவியலாளரை அச்சுறுத்தும் வகையில் நாடாளுமன்ற உறுப்பினர் றஜீவனின் முகப் புத்தக பதிவு அமைந்திருந்தததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

அதேபோன்று ஊடக விவாதத்தில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன், வர்த்தமானியின் உண்மைத்தன்மையை நிரூபிக்குமாறு சிறுபிள்ளைத்தனமாகக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்.

இவற்றைப் பாரக்கும்போது, எமது மக்களுக்கு எதிரான செயற்பாடுகளில் எமது மக்களினால் தெரிவு செய்யப்பட்டவர்கள் ஒத்துழைப்பு வழங்குகின்றார்கள் என்பது வெளிப்படுத்தப்படுகின்றது.

ஆக, அரசியல் அபிலாஷைகளுக்காகப் போராடிய இனம், இந்த மண்ணிலே இப்போது ஓர் ஆபத்தான சூழலை எதிர்கொண்டிருக்கின்றது.

இந்த இடத்திலே எமது பிரதேசங்களில் இருக்கின்ற எமது அரச அதிகாரிகளிடம் உரிமையுடன் விநயமான வேண்டுகோளை முன்வைக்கின்றோம்.

தயவு செய்து, உங்களுடைய தொழிசார் கடமைகள், தொழில்சார் கடப்பாடுகள், பதவி உயர்வுகள் போன்றவற்றுக்கு அப்பால், சமூக சிந்தனையோடு உங்களின் செயற்பாடுகள் அமைய வேண்டும். நீங்களும் இந்த மண்ணிலேதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றீர்கள். உங்கள் பிள்ளைகளும் இந்த மண்ணிலேதான் வாழ வேண்டும்.

சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும் என்பார்கள். இந்த மண்ணிலே எமது தனித்துவங்களும் அடையாளங்களும் பாதுகாக்கப்பட்டாலதான் எதிர்காலத்திலும் நாம் கௌரமாக வாழ முடியும்.

எனவே, எமது இருப்பினையும் அடையாளங்களையும் பாதிக்கும் வகையிலான சுற்றுநிருபங்கள் அறிவுறுத்தல்கள் போன்றவை உங்களுக்குக் கிடைக்குமாயின் அவை தொடர்பான விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அல்லது எமது மக்கள் சார்ந்த செயற்பாட்டாளர்களின் கவனத்துக்கு அவற்றைக் கொண்டு வருவதன் மூலம், எமது மக்களை பாதுகாப்பதற்கான உங்களின் தார்மீக கடப்பாட்டை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்.

இறுதியாக மக்களுக்கு ஒரு செய்தியைத் தெரிவிக்க விரும்புகின்றோம். இந்த அரசின் காலப் பகுதியிலும் எமது மக்களின் தாயகக் சிந்தாந்ததை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகள் சூட்சுமமாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதை இந்தக் காணி அபகரிப்பு வெளிப்படுத்தி இருக்கின்றது.

இந்தச் சூழலில் நடைபறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறுமாக இருந்தால், உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்படுகின்றவர்களும், தற்போதைய 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் போன்று, கையாலாகாதவர்களாக, தென்னிலங்கையின் நிகழ்ச்சி நிரலுக்கு ஒத்து ஓடுகினாறவர்களாகவே இருப்பார்கள்.

உள்ளூராட்சி சபைகளின் சம்மதத்துடன் தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்குச் சமாதி கட்டப்படும் அபாயம் இருக்கின்றது என்பதைப் புரிந்துகொண்டு எதிர்வரும் 6 ஆம் திகதி வாக்குகளை அளிக்க வேணடும்” - என்றார்

## மின்சாரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

காணி உரிமையாளரான 47 வயது நபர், வயலில் பொருத்தப்பட்டிருந்த யானைத் தடுப்பு மின் வேலியைச் சுத்திகரிப்பு செய்தபோது மின்சாரம் தாக்கியுள்ளது. அவரை மீட்க முற்பட்ட அவரது மகளின் கணவரான 27 வயதுடைய இளைஞரும் மின்சாரத் தாக்கத்துக்கு உள்ளானார்.

பின்னர் அவர்கள் இருவரும் ஈச்சிலம்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போதும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

## தென்னக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பூஸா சிறைச்சாலையில் உள்ள இரண்டு கைதிகளிடமிருந்து வாக்குமூலம் பதிவு செய்வதற்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கோட்டை நீதிவான் நிலுபுலி லங்காபுரவிடமிருந்து அனுமதி பெற்றுள்ளனர்.

தேசபந்து தென்னக்கோனுக்குப் பாதாள உலகக் கும்பலின் தலைவர் கஞ்சிப்பான இம் ரான் என அழைக்கப்படும் மொஹமட் நஜீம் மொஹமட் இம்ரானிடமிருந்து கொலை மிரட்டல் விடுக் கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பில் உயர் பொலிஸ் அதிகாரிகள் இருவர் தேசபந்து தென்னக்கோனுக்கு அறிவித்துள்ளதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றில் தெரிவித்துள்ளனர்.

## தமிழ்த்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

“உள்ளூராட்சி என்பது எமக்கான அதிகாரங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பு. இதை எமது தமிழ்த் தேசியத்தில் இருக்கும் ஒரு தரப்பினரே ஆளுகை செய்ய வேண்டும்.

தமிழ்த் தேசியத்தின் வலிமையை இம்முறை நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் காண்பிக்க வேண்டும்.

தென்னிலங்கையின் கட்சிகளின் பிரதிநிதிகள், அவர்களால் இறக்கப்பட்டுள்ள சுயேச்சைக் குழுக்கள் போன்றவை எம்மை மீண்டும் ஏமாற்றவே முயல்கின்றன. இவர்களை இனியும் நம்ப முடியாது.

இதை விட வடக்கில் தென்னிலங்கைக் கட்சிகளின் நலன்களை நிலைநாட்ட எம்மில் சிலர் அக்கட்சிகளின் சார்பில் போட்டியிட்டு எமது இருப்பை இல்லாதொழிக்க முயல்வது வெட்கக்கேடான விடயமாகும்.

எனவே, தமிழ் மக்களின் இருப்புக்கும் நிரந்தர அரசியல் தீர்வுக்குமாகத் தமிழ்த் தேசியப் பற்றோடும் உணர்வோடும் பயணிக்கின்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மட்டும் உங்களுடைய பெறுமதியான வாக்குகளை அளியுங்கள்.” - என்றனர்.

# சப்ரகமுவ பல்கலை மாணவனின் மரணம் தொடர்பில் ஆராய விசேட விசாரணை குழு!

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பொறியியல் பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவன் சரித் தில்ஷானின் மரணம் தொடர்பில் விசாரணை நடாத்துவதற்கு மூவர் அடங்கிய குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த தெரிவித்துள்ளார்.

இந்தக் குழுவானது சிரேஷ்ட பேராசிரியர் ஏ.ஏ.வை. அமரசிங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளதுடன், பேராசிரியர் கபில ரத்நாயக்க மற்றும் சட்டத்தரணி வை. எஸ். சந்திரசேகர் ஆகியோர் இந்தக் குழுவின் ஏனைய உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவரின் மரணம் தொதரப்பிலான உண்மைகளை ஆராய்ந்து, பொருத்தமான அவதானிப்புகள் மற்றும் முடிவுகளை உடனடியாக வழங்குமாறு குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக துணைவேந்தர் பேராசிரியர் சுனில் சாந்த தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தெதுரு ஓயாவில் நீராடச் சென்ற இரு இளைஞர்கள் மாயம்!

சிலாபம், தெதுரு ஓயாவில் நீராடிக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் நேற்று காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்டுகஸ்தோட்டை மற்றும் கலகெதர பகுதியைச் சேர்ந்த 20 மற்றும் 22 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு காணாமல் போயுள்ளனர்.

குறித்த இரு இளைஞர்களும் கண்டியிலிருந்து சிலாபம் பகுதிக்கு நண்பர்கள் குழுவுடன் ஒரு பொழுதுபோக்குப் பயணமாகச் சென்றிருந்த வேளையில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸாரின் முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் காணாமல் போன இரு இளைஞர்களையும் கண்டுபிடிக்க சிலாபம் காவல்துறையினர், இலங்கை கடற்படையுடன் இணைந்து தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

# வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் இளைஞனின் சடலம் மீட்பு!

கல்கிஸை பகுதியில் உள்ள பாழடைந்த காணியிலிருந்து வெட்டிக்கொலை செய்யப்பட்ட நிலையில் ஆணொருவரின் சடலம் கண்டெடுக்கப்படுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கல்கிஸை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட/ஹலுதாகொட வீதியில் உள்ள பாழடைந்த காணியிலிருந்து வெட்டிக் கொலை செய்யப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இரத்மலானை-மஹிந்தாராம வீதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞனின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. உயிரிழந்த இளைஞன் கடந்த 30 ஆம் திகதி இரவு வீட்டை விட்டு வெளியேறிய நிலையில் மீண்டும் வீடு திரும்பவில்லை.

இது தொடர்பில் அவரது சகோதரர்களில் ஒருவர் கல்கிஸை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். சடலம் நீதவான் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர், பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலைக்கான காரணம் தொடர்பில் தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போர்களின்........

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

கொடுங்கோன்மைக்கு எதிராக கி.பி.39இல் முதன்முதலாக கிளர்ச்சி தொடங்கிய வியட்நாமியர்கள், 1975இல் வியட்நாம் என்கிற தனி நாடாக முழுச் சுதந்திரம் அடையும்வரை போர் செய்து, போர் செய்து களைத்துப் போனார்கள்.

### காலம் : கி.பி. 907

சீனாவின் டாங் வம்சத்தின் வீழ்ச்சி தொடங்குகிறது. எந்தவொரு வளர்ச்சிக்கும் வீழ்ச்சி இருக்கும்தானே? 938இல் நடைபெற்ற பாக் டாங் போர் சீனர்களின் ஆட்சியை முற்றாகத் தகர்த்து, டாங் வம்சத்தை வேரோடு சரித்தது. அன்றைய வியட்நாம் நிலப்பரப்பின் வெற்றிக்குக் காரணமான தலைவர் பேழ ஞரலநெ, ஒரு புதிய ராஜ்ஜியத்தை உருவாக்கி, அதற்கு நாம் (தெற்கு) வியட் என்று பெயரிட்டார். அதன்பின் கிட்டத்தட்ட 800 வருடங்கள் (15ஆம் நூற்றாண்டில் சில வருடங்கள் தவிர) வியட்நாமிய மண்ணின் மன்னர்கள் பல்வேறு ஊடுருவல்களைக் கடுமையான போர்களின் மூலம் தடுத்து, ஆட்சியைத் தக்க வைத்துக்கொண்டனர்.

### காலம் : கி.பி. 15 ஆம் நூற்றாண்டு

சீனாவின் சக்தி வாய்ந்த மிங் வம்சத்தினர் மீண்டும் வியட்நாமைக் கைப்பற்றுகின்றனர். இந்த முறை அவர்களது ஆட்சிமுறை வேறாக இருந்தது. வியட்நாமிய மக்களைச் சீனக்கடவுள்களை வணங்கவும் சீனமொழி பேசவும் கட்டாயப்படுத்தினர். இயற்கை வளங்களைக் கைப்பற்றினர், அழித்தனர். “வியட்நாம் இதுவரை அனுபவித்ததைவிட மிங்கின் ஆட்சி மிக மோசமாக இருந்தது” என்கிறார், ‘தி ஸ்மாலர் டிராகன் : எ பொலிட்டிகல் ஹிஸ்டரி ஆஃப் வியட்நாம்’ என்கிற நூலின் வரலாற்றாசிரியர் ஜோசப் பட்டிங்கர். சீனாவின் அடக்குமுறையைத் தொடர்ந்து மீண்டும் மிகப்பெரிய கிளர்ச்சி எழுந்தது. 1428இல் லீ லோய் என்பவர் தலைமையில் ஹனோயில் புதிய தலைநகர் நிறுவப்பட்டு, சுதந்திர ஆட்சி பிரகடனப்படுத்தப்பட்டு அடுத்த 400 வருடங்கள் பல்வேறு அந்நிய சக்திகளின் ஊடுருவல்களுக்கிடையே வியட்நாமியர்களின் ஆட்சி தொடர்கிறது.

### காலம் : கி.பி. பதினாறாம் நூற்றாண்டு

போர்ச்சுகல், ஸ்பெயின், இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற பல ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வணிகர்கள் மற்றும் கிறிஸ்தவ மிஷனரிகள் சாரைச் சாரையாக உலகம் முழுக்கப் பயணிக்கின்றனர். அன்றைய ஐரோப்பியர்களின் நோக்கம் ஒருபுறம் வணிகம், அதன்மூலம் ஆக்கிரமிப்பு, அதன்வழியே செல்வ வளங்களைச் சுரண்டுதல் என்பதாகவும், மற்றொரு புறம் கிறிஸ்தவ மதம் பரப்புதல் என்பதாகவும் இருந்தது. அதனால் செல்வத்தையும் மக்களையும் குறிவைத்த அவர்கள் பார்வையில் வியட்நாம் என்கிற தேசம் கண்ணில்பட, அல்வா போல அள்ளிக்கொண்டனர். அப்படி வந்தவர்களுக்குள் நடந்த வணிகப் போட்டியில் இறுதியாக பிரெஞ்சு வணிகர்கள் தங்கள் இருப்பைத் தக்க வைத்துக்கொண்டனர்.



### காலம்: கி.பி. 1850

வணிகம் செய்ய வந்தவர்களுக்கு நாடு பிடிக்கும் ஆசை தன்னிச்சையாகத் தொற்றிக்கொள்ள, பிரெஞ்சு வணிகர்களின் கோரிக்கைக்கேற்ப பிரெஞ்சுப் பேரரசர் மூன்றாம் நெப்போலியன் பிரெஞ்சுப் படையை அனுப்பி வைக்க, 1859இல் அவர்கள் சைகோனைக் கைப்பற்றியதிலிருந்து வியட்நாமில் பிரெஞ்சு ஆதிக்கம் தலைதூக்கத் தொடங்கியது. உலகளாவிய பேரரசை நிறுவ வேண்டும் என்கிற பேராசையுடன் பிரான்ஸ் நாட்டுக் கடற்படை வியட்நாமிய படைகளுடன் 25 வருடங்கள் ஓயாது போரிட்டு 1883இல் வியட்நாமை முழுமையாக தம்வசப்படுத்தினர்.

பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியில், வியட்நாமியர்களின் வாழ்க்கைத்தரமும் தொழிலும் வீழ்ச்சியடைந்தது. அவர்களின் பொருளாதாரக் கொள்கைகள் சாதாரண மக்களை அச்சமுறச் செய்தன. குறைந்த ஊதியத்திற்குப் பயங்கரமான சூழ்நிலையில் நீண்ட நேரப் பணி எனச் சாமானியர்களின் வாழ்க்கை மிகவும் கடினமாகியது. அதன் விளைவாக தேசியவாதக் கனவுகள் மீண்டும் உயிர்பெற்றன. “பிரான்சின் ஆட்சி திறமையற்றதாகவும் சீரற்றதாகவும் கடுமையானதாகவும் மக்களின்பால் அக்கறையற்றதாகவும் இருந்தது” என்கிறார் ‘எ டைம் ஃபார் வார்’ என்கிற நூலின் ஆசிரியர் ராபர்ட் டி ஷூல்ஜிங்கர் **(Robert D Schulzinger)**. மக்கள் மீதான அக்கறையற்ற பிரான்சின் செயல்கள் ‘அந்நிய ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பு’ என்கிற எரியும் கொள்ளியில் எண்ணெய் ஊற்றி நெருப்பைப் பெருக்க, பிரான்சை வியட்நாமில் இருந்து வெளியேற்றுவதற்கான வலுவான இயக்கம் இயல்பாக உருவாகியது. ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு சீனர்கள் தங்கள் நிலத்தை முதன்முதலில் கைப்பற்றியபோது ஆழ்மனதில் அடக்கப்பட்டு வழிவழியாக கடத்தப்பட்டிருந்த கோபம், அழுத்தப்பட்ட பிரெஞ்சு காலனித்துவ ஆதிக்கத்தில் பெரு வெடிப்பாக வெடித்தது. உள்நாட்டில் அமைதியின்மை அதிகரித்தது. வியட்நாமியர்களின் ஆயுதமேந்திய கிளர்ச்சிகளையும் அமைதியான போராட்டங்களையும் மிருகத்தனமாக அடித்து நொறுக்கியது பிரெஞ்சுப் படை. வியட்நாமிய மக்களின் வாழ்க்கை கிளர்ச்சிகளாலும் போராட்டங்களாலும் தினம்தினம் நரகமானது.

காலம் மாறியது, இரண்டாம் உலகப்போர் விஸ்வரூபமெடுத்தது. உலக நாடுகளின் நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டன. எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் வியட்நாமியர்களின் வாழ்வு மட்டும் விடியவேயில்லை. இரண்டாம் உலகப் போரினால் உலகே பற்றி எரியும்போது சந்தடி சாக்கில் ஜப்பான் மூக்கை நுழைக்கப் பார்த்தது. பிரான்ஸ் மீது எரிச்சலில் இருந்த வியட்நாம் மக்களும் முதலில் ஜப்பானிய சிப்பாய்களை, தங்களை மீட்க வந்த ரட்சகர்கள் என ஆரத்தி எடுத்து வரவேற்றார்கள். ஆனால், “மூக்கணாங்க் கயிறுகள் மாற்றப்படுவது மாடுகளுக்கு மகிழ்ச்சி தராது” என்று எச்சரிக்கை விடுத்தார் ஹோ சி மின். இரண்டாம் உலகப் போரின் எஞ்சிய காலத்தில் வியட்நாமின் தேசியவாத கெரில்லாக்கள் பிரெஞ்சு, ஜப்பானியர்களுக்கு எதிராகப் போரிட்டனர். இதற்கு அமெரிக்க உளவுத்துறையின் ஒத்துழைப்பும் இருந்தது.

செப்ரெம்பர் 2, 1945இல் வியட்நாம் சுதந்திரம் அடைந்து விட்டதாக ஹோசிமின் உலகத்திற்கு அறிவித்து, தேர்தலை நடத்த ஹோ சி மின் கம்யூனிஸ்ட் கட்சி வெற்றி வாகை சூடியது. இரண்டாம் உலகப் போரின் முடிவில் ஐரோப்பாவின் பெரும்பாலான பகுதிகள் சிதிலமடைந்து போயின. பிரான்ஸ் கலகலத்துப்போனது. பொருளாதாரம் மிக மோசமாக உடைந்தது. போர்க்காயங்களிலிருந்து மீண்டு வரவேண்டுமென்றால், வியட்நாமை மீண்டும் கைப்பற்றுவது அவசியம் என பிரான்ஸ் முடிவு செய்தது. பிரான்ஸ் தனது பழைய காலனித்துவப் பிரதேசத்தில் ராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்தபோது அமெரிக்கா எதிர்க்கவில்லை. (அமெரிக்காவின் அரசியல் அன்றும் இன்றும் என்றும் புரியாத புதிர்தான்.) ஹோ சி மின் வியட்நாமிய சுயராஜ்யத்தை அங்கீகரிக்கும்படி எட்டுமுறை அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனுக்குக் கடிதங்கள் எழுதினார். ஆனால் அமெரிக்காவும், பிற நாடுகளும் இந்த அங்கீகாரத்தை மறுத்துவிட்டன. 1946இல் பிரெஞ்சு, வியட்நாமின் படைகளுக்கு இடையே நீண்ட காலமாக நிலவி வந்த போர்கள் இறுதியாக முழுப் போராக வெடித்தது.

1946 முதல் 1954 வரை பத்து ஆண்டுகள் கடுமையான போர் நீடித்தது. இறுதியில் 1954இல் வியட்நாமை வடக்கு, தெற்கு எனப் பிரிக்கும் ஒப்பந்தம் ஜெனீவாவில் கையெழுத்தாக, வியட்நாம் இரண்டாகப் பிளக்கப்பட்டு, வடக்கில் கம்யூனிச அரசாங்கமும் தெற்கில் அமெரிக்க ஆதரவு அரசாங்கமும் அமைந்தன.

‘மறுபடியும் முதலில் இருந்தா?’ என அலுத்துக்கொண்டே வியட்நாம் ஒன்றுசேருவதற்காக மீண்டுமொரு 30 ஆண்டுகாலப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டியதாயிற்று. முழு வியட்நாமும் கம்யூனிஸ்ட் நாடுகளாகிவிடக் கூடாதே என்கிற அச்சத்தால் போரை வலுக்கட்டாயமாக நீட்டித்து லட்சக்கணக்கான உயிர்களைப் பலி வாங்கியது அமெரிக்கா. வியட்நாம் கம்யூனிஸ்டுகளின் கைகளுக்குள் போய்விடக் கூடாது என்பதுதான் அமெரிக்காவின் குறிக்கோள். இதற்காகப் பல்லாயிரம் கிலோமீட்டர்கள் தள்ளியிருந்த வியட்நாமில் வழக்கம்போல தனது மூக்கை நுழைத்து பொம்மை அரசை உருவாக்கியது. உலகை உலுக்கிய கடுமையான போரின் முடிவில் 1975இல் அமெரிக்காவைத் தோற்கடித்து வட வியட்நாம் வெற்றி பெற்று சுதந்திர நாடானது.

ஆக்கிரமிப்பாளர்கள் தங்கள் பேராசையினாலும் ஆணவத்தாலும் அந்த நிலம் நோக்கிச் சென்றனர். ஆனால், மற்றொரு நாட்டின் பகுதியாக இருக்க வியட்நாம் ஒருபோதும் விரும்பவில்லை. இருபதாம் நூற்றாண்டு முழுவதும் ஏற்பட்ட பத்துப் போர்களால் கடுமையான சமூக - அரசியல் மற்றும் பொருளாதார அமைதியின்மைக்கு உட்பட்டது வியட்நாம். வியட்நாமிய வரலாறு இந்த எண்ணற்ற போர்களின் இருண்ட ஆட்சியால் நிரம்பியுள்ளது.

சீனா, பிரெஞ்சு, அமெரிக்கா, ஜப்பான் என நான்கு ஏகாதிபத்தியங்களை முறியடித்து வெற்றிவாகை சூடிய வீரஞ்செறிந்த மக்கள் வியட்நாமிய மக்கள். தேச விடுதலைப் போராட்டம், ஏகாதிபத்திய எதிர்ப்பு, சோசலிசப் புரட்சி எனப் பன்முகப் பரிமாணங்களைக் கொண்டது அவர்களது போராட்டம். உலகின் மிக நீண்ட போரைத் தன் மார்பில் சுமந்து தன்னைத் தொலைக்காமல் மீட்டெடுத்திருக்கும் இயற்கையின் பொக்கிஷமான வியட்நாம் உண்மையில் போர்களின் தேசம்தான். அத்தகைய போர்களை அனுபவித்தவர்கள், இன்று போர் குறித்த எந்தச் சிந்தனையும் இல்லாமல், அமைதியான வாழ்க்கையை வாழ்கிறார்கள். கொடூரமான போர்கள் அவர்களை மனிதநேயமிக்கவர்களாக மாற்றியிருக்கிறது. நிறைய புன்னகை செய்கிறார்கள். உதவி செய்வதில் தாராளமானவர்களாக இருக்கிறார்கள். வாழ்க்கையை வாழ்ந்து அனுபவிக்கிறார்கள்.

## பல்கலைக்கழக அனுமதிக்கான கையேடு நாடெங்கிலும் இன்று முதல் விநியோகம்!

அண்மையில் வெளியிடப்பட்ட கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் 2024ஃ2025 கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக மாணவர் அனுமதிக்கான வழிகாட்டல்கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இந்தக் கையேடுகள் நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக அனுமதி விண்ணப்பங்கள் எதிர்வரும் 09 ஆம் திகதி முதல் ஏற்றுக்கொள்ளப்படவிருப்பதுடன், விண்ணப்ப முடிவுத்திகதி இம்மாதம் 30 எனவும், அனுமதிக்கான வழிகட்டல் கையேடுகளை நாளை 03ஆம் திகதி சனிக்கிழமை முதல் மாணவர்கள் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

2024 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சை முடிவுகளின் படி பல்கலைக்கழக அனுமதிக்குத் தகைமைபெற்ற மாணவர்களில் அரச பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பிக்க விரும்புபவர்கள் இல. 20, வாட் பிளேஸ், கொழும்பு 07 எனும் முகவரியில் அமைந்துள்ள பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் செயலகத்தில் அல்லது நாடெங்கிலுமுள்ள பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடம் கையேட்டுக் கட்டணமாக ரூபா 1,000.00 செலுத்தி நேரடியாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

தபால் மூலம் அனுமதிக் கையேட்டைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் இலங்கை வங்கி, ரொறிங்டன் கிளையின் 0002323287 என்ற கணக்கிலக்கத்துக்கோ அல்லது மக்கள் வங்கி, நகர மண்டபக் கிளையின் 167-1-001-4-3169407 என்ற கணக்கிலக்கத்துக்கோ விண்ணப்பக் கட்டணமாக ரூபா 1,000.00 வைப்பிலிட்ட சிட்டையுடன் சுயமாகத் தயாரிக்கப்பட்ட வேண்டுகைக் கடிதத்துடன், சுயமுகவரியிடப்பட்ட தபாலுறையுடன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும், மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள் 011-2695301, 011-2695302 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளலாம் எனவும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி
கறுவா, மிளகு ஆகிய பயிர்ச்செய்கையும் பராமரிப்பும்
அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
அருகில் உள்ள நகரங்கள்
Haputala 16km
Diyatalawa 24km
Bandaralawela 27km
Badulla 55km
Nuwara Eliya 58km
Hatton 98km
Hambantota 108km
Pottuvil 129km
Kandy 142km
Colombo 190km
Batticaloa 199km
அருகில் உள்ள விமான நிலையம்
Mattala 84km
Bandaranayake 190km
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!